உ
சிவமயம்



யாழ்ப்பாணம் மூளாய் வாசரும்

சைவ வேளாண்குலதிலகருமான

# ஸ்ரீமான் நாராயணபிள்ளை நாகலிங்கம்

# அவர்கள்

சிவபதப் பேறு பெற்றமை குறித்து வெளியிடப்பட்ட

# நினைவு மலர்

16-04-1995

பொன்னாலை ஸ்ரீ வரதராசப் பெருமாள் தேவஸ்தான பரிபாலன சபையின் கணக்காய்வாளராக கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக மிக்க கடமை உணர்வுடனும் இறை பக்தியுடனும் நேர்மையுடனும் கடமையாற்றி சபையின் பணிகள் சீராகவும் செம்மையாகவும் நடைபெற உதவிபுரிந்த திரு. நாராயணபிள்ளை நாகலிங்கம் அவர்களின் பெருமையையும் சிறப்பையும் நினைவுகொள்ளுமுகமாக இம் மலர் மேற்படி தேவஸ்தான பரிபாலன சபையினரால் வெளியிடப்படுகிறது.



# அமரர் நாராயணபிள்ளை நாகலிங்கம் அவர்கள்

தோற்றம்: **09-03-1921** மறைவு: **15-03-1995**

திதி வெண்பா

நாராயண பிள்ளை நாகலிங்கப் பெரியோன்
சீராரும் ஐங்கரன்தாள் சேர்ந்தனனே தேராரும்
பங்குனிசேர் மகத்தோடு பாங்கான சதுர்த்தசியில்
இங்கிதமாய் இவ்வுலகு நீத்து.

உ
சிவமயம்

# தோத்திரமாலை

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

பிடியத னுருவுமை கொளமிக கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலம்முறை யிறையே.

மனத்தகத்தான் தலைமேலான் வாக்கினுள்ளான்
வாயாரத் தன்னடியே பாடுந்தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தஞ் சிரத்தின் மேலான்
ஏழண்டத் தப்பாலான் இப்பாற் செம்பொற்
புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதினுள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றினுள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத் துச்சியுள்ளான்
காளத்தியான் அவன் என் கண்ணுள்ளானே.

## திருவாசகம்

அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட்கொண்டபோதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்குண்டோ எண்டோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு நாயகமே

## திருவிசைப்பா

தனதனற்றோழா சங்கரா சூலபாணியே தாணுவே சிவனே
கனக நற்றூணே கற்பகக் கொழுந்தே கண்கள் மூன்றுடையதோர் கரும்பே
அனகனே குமர விநாயக சனக அம்பலத்தமர சேகரனே
உன்கழலிணை மென் நெஞ்சினுள் இனிதாத் தொண்டனேன் நுகருமா நுகரே

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்; பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகுங் கழற உழறி உமை மணவாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

அண்ணலே எனை ஆண்டு கொண்டருளிய அமுதே
விண்ணிலே மறைந்து அருள்புரி வேதநாயகனே
கண்ணினால் திருக்கைலையில் இருந்த நின்கோலம்
நண்ணி நான் தொழ நயந்தருள் புரிஎனப் பணிந்தார்.

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசொற் குமரேசா
கறயானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## அபிராமி அம்மை பதிகம்

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடுவா ராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணியி லாத உடலும்
சலியாத மனமும் அன் பகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
துன்ப மில்லாத வாழ்வும்
துய்ய நின் பாதத்தில் அன்புமுதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டுகண்டாய்
அலையாழி அறிதுயிலு மாயனது தங்கையே
ஆதிகடவூரின் வாழ்வே
**அமுதீசர்** ஒருபாகம் அகலாத சுகபாணி
**அருள்வாமி** அபிராமியே.

**திருச்சிற்றம்பலம்**

அமரர் திரு. நாராயணபிள்ளை – நாகலிங்கம்

அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

**ஆசிரியப்பா**

நாற்பா லுங்கடல் நாப்பண் இலங்கிடும்
இரத்தினத் துவீபமென் றிசைப்பர் பல்லோர்
இலங்கா புரியென இலங்குதொல் நாடு
மலைவளம் கடல்வளம் மாண்புறு நிலவளம்
மலரயன் படைத்த மாட்சிமை மிக்கது
இந்நா டென்றே எல்லோர் மனதிலும்
பல்லாண் டாகப் பழகி வந்தது
அந்நா டதனின் அழகிய சிரமென
சைவமும் தமிழும் தரும்பல சாஸ்திரம்
எல்லாம் நிறைந்தே இலங்கு யாழ்ப்பாணம்
யாழ்ப்பா ணத்தின் வலிமேற் கெனப்படும்
பகுதியி லுள்ள பற்பல ஊர்களுள்
வளமிக வுடையது மூளா யம்பதி
அப்பதி தன்னில் மெய்ப்பக்தி யுடைய
உத்தமத் தோன்றல் நாராயணபிள்ளை
சைவ வேளாளர் குலத்துத் திலகராய்
திகழ்ந்துமே சிறந்து வாழ்ந்தவ ராவார்.
நாராயணபிள்ளை என்னுநற் சான்றோன்
முத்துப்பிள்ளை என்னும் மங்கை
நல்லாள் தன்னை மணந்தே வாழ்வில்
மெத்தவும் பலரும் போற்றிட வாழ்ந்தார்
இல்லற மென்னும் நல்லறக் காவில்
கணபதிப்பிள்ளை இலட்சுமியாரொடு
செல்வத்துரையும் நாகலிங்கமும்
வேலுப்பிள்ளை எனும் ஐவர் பூத்தனர்
கல்வியிற் கலைகளில் கவினார் நலங்களில்
சிறப்புடன் வாழ்ந்தே சீர்பல பெற்றனர்
அவர்தம் முன்னே அண்ண லான
நாகலிங் கமெனும் நல்ல சான்றோன்
கல்வியைக் கற்றார் கருத்துடன் நாளும்

எல்லையில் மக்கள் இவரை ஏத்தினர்
கூட்டுறவு இலாகா தன்னில் சேர்ந்து
பரிசோ தகராய்ப் பாங்குடன் விளங்கினார்
கடமை கண்ணியம் கட்டுப் பாடெனும்
இவற்றினைப் பேணி இனிதே வாழ்ந்தார்
படிப்படி யாகப் பதவி யுயர்ந்தது
காரி யாலய பரிசோதகர் ஆனார்
ஓய்வுக்காலம் ஆகும் போது
பதவிநிலை உத்தியோகத்தர் ஆனார் அன்றோ
இத்தகைச் சிறப்புடை ஏந்தல் தானும்
மூளாயம் பதியில் முதன்மை மனிதர்
கார்த்திகேயப் பெரியனும் செல்லம்
என்னும் நங்கை நடத்திய வாழ்வில்
பூத்த செந்திரு பத்மா வதியெனும்
பாங்குடைப் பாவையைப் பல்லோர் வாழ்த்த
வதுவை செய்தே வாழும் நாளில்
ஜெகதிஸ்வரியொடு ஸ்ரீதரன் ஸ்ரீகாந்தன்
கலைச்செல்வி ஸ்ரீகணேஷன் ஸ்ரீபாஸ்கரனெனப்
பிள்ளைச் செல்வத்தைப் பெரிதே பெற்றனர்
மூத்த செல்வி ஜெகதீஸ்வரி தான்
ரங்க நாதன் என்றிடும் ஏந்தல்
தொழில் நுட்பக் கலைஞர் தன்னைத்
திருமணம் செய்து ஜேர்மனி நாட்டில்
திகழும் செல்வியாய் வாழ்கின்றாரே
ஸ்ரீதரன் என்னும் செல்வன் தானும்
மாவட்டத் தொலைத் தொடர்புத் பரிசோதகராய்
கொழும்பில் வாழும் பெருந்தகை ஆனார்
கௌரி என்னும் காரிகை தன்னைத்
திருமணம் புரிந்தே வாழ்ந்து வந்தார்
மயூரி என்னும் மாண்புடைக் குழந்தை
தன்னைப் பெற்றுத் தரணியில் உள்ளனர்
ஸ்ரீகாந்தன் என்னும் சிறப்புமிகு மைந்தனும்
பி. கொம் படித்து ஆசிரியர் ஆனார்
சாந்தினி என்னும் ஆசிரியை தன்னைத்
தகவாய் மணந்து தரணியில் உள்ளார்.
மனையை விளக்கும் மணிவிளக்காம் கலைச்செல்வி
என்னும் மற்றொரு செல்வியும்
ஸ்ரீகணேசன் என்னும் சீர்சால் மைந்தன்
சங்கானைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க
கிளைமனேஜர் ஆகக் கடமையிலுள்ளார்
ஸ்ரீபாஸ்கரனும் கொழும்பிலுள்ள

மஸ்கன்ஸ் கொம்பனியில் மகிழ்ந்தே உள்ளார்.
இதற்கு சிறப்பெலாம் எய்திய ஏந்தல்
மெத்தவும் பக்தி மிகுகணபதியில்
சதுர்த்தி, சஷ்டி நாள்களென்றாலே
விநாயகர் முன்றலில் விளங்கிய நிற்பார்
நேர்மை ஒழுக்கம் நிறைந்த பண்பு
கடமை கண்ணியம் கட்டுப் பாட்டுடன்
இல்லறம் தன்னை நல்லறமாக
ஏற்றே வாழ்ந்த இனிய நல்லோன்
வினைவழியாலும் விதி வழியாலும்
நோயுற் றிவ்வுலக வாழ்க்கை தன்னை
நீத்தார் அந்த நினைவை நாங்கள்
மறந்திடற் கரிதோ மறலி கயிறு
நாக லிங்கப் பெரியோன் தன்னை
பற்றி அழைத்திடப் பறந்தே சென்றார்
பெற்றார் இன்ப வாழ்வு
அடைக சாந்தி, அடைக சாந்தி.

## மனைவி புலம்பல்

1. வாழ்க்கையெனும் ஓடத்தில் நாங்களேறி
வளமுடனே வாழ்ந்திருந்து களிப்பும் கொண்டு
தாழ்ச்சியது ஏதுமின்றி வாழ்ந்தோ மையா
தரணியிலே நன்மக்கட் பேறும் பெற்றோம்
பாழ்த்ததொரு விதிநம்மை பிரித்தே யின்று
பதைபதைத்துக் கதறியழ வைத்த தந்தோ
ஏக்கமுறும் எனக்கினிமேல் துணையா ருண்டு
என்கணவா என்தலைவா எங்கே சென்றீர்.

2. நித்தமுமே நோயால் நான் வருந்தும் போது
நீரிருந்து பராமரித்துக் காத்தீ ரையா
எத்தனைபேர் இருந்தாலும் உம்மைப் போன்று
எனக்கினியார் உலகெங்கும் காணொ ணாதே
அத்தனென அன்னையென அன்புகாட்டி
அகிலத்தில் கணவனென உரிமை பூண்டு
இத்தரையில் என்மீது உயிரை வைத்தீர்
இனிமேலும் எனக்கிங்கு வாழ்வு உண்டோ.

## மூத்த புதல்வியும் கணவரும் ஜேர்மனியில் இருந்து புலம்பல்

கண்ணே போல் எமைக்காத்த அருமை அப்பா
காசினியில் உமையெங்கும் தேடுகின்றோம்
பண்ணாரும் தமிழினிலே கதைகள் சொல்வீர்
பக்குவமாய் எமக்கரிய புத்தி சொல்வீர்
கண்ணாரும் குணமுடையீர் தரணி மீது
தந்தையுமைப் போல் நாமும் கண்டதில்லை
விண்ணாடு செல்லுதற்கு மனம் வைத்தீரோ
வேதனையால் துடிக்கின்றோம் எங்கள் தந்தாய்.

எம் வதுவை தனைநீங்கள் இந்தியாவில்
ஏற்றமுடன் நடத்திமன நிறைவு கொண்டே
பன்னரிய குணமுடைய மாமா வாகப்
பாசமதைச் சொரிந்தீரே மறக்கமாட்டோம்
அன்னையைப் போல் அரவணைப்பீர் எங்கள் மாமா
அத்தனும் உங்களையே அழைத்து விட்டார்
என்னசொலி எவரழுதும் பயனொன் றுண்டோ
எழுதியவன் அன்றைக்கே முடித்து விட்டான்.

### மற்றைய பிள்ளைகள் புலம்பல்

கல்வியொடு செல்வமதைப் பெற்று வாழக்
கருத்துடனே எமக்குழைத்த அரிய தந்தாய்
இல்லையொரு துணையென நாம் ஏக்கம் கொள்ள
எங்கே நீர் சென்றுள்ளீர் இயம்புவீரே
வல்லவரே எங்களது வாழ்வுக் காக
வகை வகையாய்ப் புத்திமதி சொல்லித் தந்தீர்
எல்லையிலாப் பரம்பொருளை உம்மிற் கண்டோம்
எமக்கினிமேல் துணைசெய்ய யார்தா னுள்ளான்.

அப்பாவே உங்களது பெயரைச் சொல்லி
அகிலத்தில் பெருமைபெற வாழ்ந்தோ மந்தோ
இப்பாரில் எங்களைப்போல் பாவி மக்கள்
எவருமே இல்லையெனச் சொல்ல லாமோ
தப்பேதும் யாம்செய்தால் பொறுக்கமாட்டீர்
தயவுடனே எங்களுக்குப் புத்திசொல்வீர்
எப்போநாம் இனியும்மைக் கண்டு பேச
எங்களது அன்புருவே எங்கே போனீர்.

## மருமக்கள் புலம்பல்

மாமாவே எங்களுக்குத் தந்தை போல்வீர்
மனம் நோக எதனையுமே பேசமாட்டீர்
சாவேதான் வந்தெம்மைப் பிரித்துச் செல்லத்
தாரணியில் நாம் வருந்தி நோகின்றோமே
நாமாக எக்கருமம் செய்திட்டாலும்
நமக்குரிய புத்திமதி சொல்லி வைப்பீர்
ஓயாது உழைத்த உங்கள் கரங்கள் தாமும்
ஓய்ந்து நின்று போனதையோ பொறுக்கலாற்றோம்.

அன்புள்ள மாமாவே எங்களோடு
அருகிருந்து கதைகள் எல்லாம் பேசிக்கொள்வீர்
இன்பமொடு துன்பந்தான் வந்திட்டாலும்
எங்களுக்கு உதவிசெய்வீர் எங்கள் மாமா
என்புருகி மனந்நொந்து நாங்கள் இங்கு
ஏங்கிமனம் துடிக்கின்றோம் எங்கள் மாமா
முன்பிருந்து சபைதன்னை நடத்த வேறு
மூத்தவர்கள் இல்லாது முனகுகின்றோம்.

## பேர்த்தி புலம்பல்

அப்பப்பா உங்களுக்கோர் பேரப்பிள்ளை
அன்பான மயூரிஎனக் கூறி நிற்பீர்
இப்போ நீர் எமைமறந்து ஏகிவிட்டீர்
இனியாரை அன்போடு அழைப்பேன் நானே
சுற்றத்தார் ஊரவர்கள் என்னைக் கண்டு
சுகமதனை விசாரித்தால் என்ன சொல்வேன்
தப்போதும் செய்தேனோ ஏனோ சென்றீர்
தாவியெமை அணைத்திடவும் வருவதெப்போ.

## சகோதரர் புலம்பல்

ஓர் தாயின் வயிற்றுதித்தோம் ஒன்றாய்க் கூடி
ஒரு காலத்தில் உண்டுநிதம் வாழ்ந்து வந்தோம்
மார்பினிலும் தோள்மீதும் வளர்ந்த நாள்கள்
மறந்திடவும் ஆகாது மறுகுகின்றேன்
யார்மீதும் குறைகாணா எங்கள் அண்ணா
யானிங்கு தனித்தொரு மரமும் ஆனேன்
பார்மீது எனக்கினிமேல் துணையாருள்ளார்
பதைக்கின்றேன் உங்களது அருமைத் தம்பி.

## மைத்துனர், மைத்துனிமார் புலம்பல்

அத்தானே எங்களது அருமைத் தந்தாய்
ஆதரவாய் உம்மோடு கதைத்துப் பேசி
பற்றோடு நாம்வாழ்ந்தோம் வைய மீதில்
பாரிலுமைப் போலுமொரு மனிதர் உண்டோ
சற்றேனும் முகமதுவும் கடுக்க மாட்டீர்
சாந்தமொடு எமையணுகிப் புத்திசொல்வீர்
தங்கோனே தரணியிலே புகழும் மூத்த
சான்றோனே உமைநாமும் காண்பதெப்போ

## பேறாமக்கள் பேரப்பிள்ளைகள் புலம்பல்

எங்களது தந்தையைப்போல் நீரும் நின்று
எமக்கரிய புத்திமதி பலவும் சொல்வீர்
தங்களது அன்புருவம் மறைந்த பின்னர்
தருக்கிழந்து நாமிங்கு வாடுகின்றோம்
பொங்கியெழும் துயரமதைத் தாங்கிநாமும்
பூவுலகத்தில் நடைப்பிணம்போல் போனோம் நாமே
பங்கமுறுக் குணம்படைத்த எங்கள் தாத்தா
பாலகர் நாம் பதைக்கின்றோம் வருவீரெப்போ.

## சுற்றத்தார் புலம்பல்

வழியினிலே தெருவினிலே எமைக் கண்டால்
வாய்நிறைய கதைபேசிச் சுகத்தைச் சொல்வீர்
பழியதனைப் பாவத்தைச் செய்ய வொண்ணாப்
பக்குவனே உமைப்போலும், யார்தானுள்ளார்
அருகிருந்து சுற்றமதைப் பேணிக்காத்து
அன்போடு உபசரணை செய்து கொள்வீர்
தெளிவுபெறா மனத்தோடு புலம்புகின்றோம்
தேவருல கணைந்திரோ செப்புவீரே.

## அயலவர் புலம்பல்

நட்புக்கோர் இருப்பிடம்தான் நாகலிங்கம்
நல்லதொரு தோழனை நாம் இழந்துவிட்டோம்
நாம் சென்ற வேளை யெல்லாம்
இனியமுகம் காட்டியெமை வரவேற்பாரே
பொறுப்புள்ள இல்வாழ்வை முடித்துக்கொண்டு
புண்ணியரே நீரின்று ஏகிவிட்டீர்
கற்புக்கு அரசி உங்கள் மனையாளோடு
கதறிவிழுந் தலறுகின்றோம் நாமு மன்றோ.

## தேற்றம்

ஒரு பொழுது வாழ்வ 'தறியார் கருதுப
கோடியு மல்ல பல — பெருகுபுகழ்
நாகலிங்கப் பெரியோன் நண்ணினான் ஐங்கரன் தாள்
பேசரிய வீடு பெற.

*ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப*
*கோடியும் அல்ல பல.*

— திருக்குறள்

# அஞ்சலி உரை

உயர்திரு நாராயணபிள்ளை நாகலிங்கம் அவர்களது திடீர் மறைவினைக் கேட்டதும் அதிர்ச்சி அடைந்தேன். அன்னாரது திடீர் மறைவு எனக்கு மட்டுமன்றி எல்லோருக்குமே அதிர்ச்சியை அளித்திருக்கும். திருவாளர் நாகலிங்கம் அவர்கள் மூளாயில் வாழ்ந்த ஒரு சிறந்த சமூக சேவையாளர். அது மட்டுமன்றி சிறந்த கூட்டுறவாளராகவும் திகழ்ந்தவர். இவர் கூட்டுறவு இலாகாவில் நிர்வாக உதவியாளராக இருந்து ஒய்வு பெற்றவர். கூட்டுறவு சம்பந்தமான விடயங்களில் தேர்ச்சியும் அநுபவமும் நிரம்பப் பெற்றவர். மேலும் அயலூரான பொன்னாலை வரதராசப் பெருமாள் ஆலயத்துடனும் நெருங்கிய தொடர்புடையவர். ஆலய பரிபாலன சபையின் கணக்காய்வாளராக விளங்கியவராவர்.

இவ்வாறு தனக்காக அன்றி சமூகத்திற்காக சமூக சேவையை விரும்பிச் செய்பவராக விளங்கிய திரு. நாராயணபிள்ளை நாகலிங்கம் அவர்களது மறைவு எல்லோருக்கும் பாரிய இழப்பாகும். அன்னாரது ஆத்மா இறைவனது பாதார - விந்தங்களில் சேர பிரார்த்தனை செய்து கொள்வதுடன் அவரது மனைவி, பிள்ளைகளது துயர் நீங்கவும் கடவுளை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கா. சந்திரராசா
பிரதேச செயலாளர்/மேலதிக அ. அதிபர்
வலிகாமம் மேற்கு, சங்கானை

பிரதேச செயலகம்,
வலிகாமம் மேற்கு,
சங்கானை.
27-03-1995

# அமரர் நா. நாகலிங்கம்

கூட்டுறவுத் திணைக்களத்தில் அயராத சேவை புரிந்து இயக்கத்தின் வளர்ச்சிக்கும் துரிதமான பயன்களைப் பெறத் தக்கவரான நேர்மையான பாதைகளைக் காட்டிய விசுவாச போக்கைக் கொண்டவர். அமரர் உயர்திரு நா. நாகலிங்கம் இளைப்பாறிய காலத்தின் பின் கூட தனது சேவையை கௌரவ சேவையாக தொடர்ந்து அமைதியான முறையில் சி. க. கூ. சங்கங்களை முன்னெடுத்துச் சென்ற இப் பெரியார் தன் உயிர் நீக்கும் வரை துடிப்பாகவே செயற்பட ஆண்டவன் அருள் பெற்றிருந்தது இவரது இதய சுத்தியை வெளிப்படுத்துகிறது என்பதனை எழுதும் போது பெருமைப்படக் கூடியதாகிறது.

பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும் என்ற நல்வாக்குக்கு எடுத்துக்காட்டாக இவர் குடும்பத்தவர்கள் சிறப்புற வாழ்வார்கள் என்பதற்கு எதுவித ஐயமுமில்லை.

இப்பெரியார் ஆத்மா சாந்தி பெற நாம் அவர் காட்டிய நேர்மையான பாதையில் எமது சேவைகளைத் தொடருவோமாக.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

க. பஞ்சலிங்கம்
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப
கோடியும் அல்ல பல.

—திருக்குறள்

# அமரர் திரு. நா. நாகலிங்கம்

''உண்ணலும் உனதே; உயிர்த்தலும் உனதே;
உடலுயிர் மனமெல்லாம் உனதே;
எண்ணலும் உனதே; இச்சையும் உனதே;
என்செயற் பயனெல்லாம் உனதே;''

— அன்புறுதி

அமரர் திரு. நாகலிங்கம் அவர்களின் இறுதியைக் கேள்விப்பட்ட போது இம் மேற்கோள் தான் என் சிந்தையில் தோன்றியது. தன் வாழ்க்கையை ஓர் அர்ப்பணமாக நினைத்து வாழ்ந்து முடித்துக் கொண்டார். சிரித்த முகமும், இனிமையான பேச்சும், பணிவும் ஒருங்கே அமைந்தவர் தான் திரு. நாகலிங்கம். படித்த பண்புடைய குடும்பத்தில் உதித்த திரு. நாகலிங்கம் அவர்கள் கூட்டுறவு இலாகாவில் நிர்வாக உதவியாளராக கடமையாற்றி இளைப்பாறியவர். தன் கடமையைக் கருத்தோடு, ''செய்யும் தொழிலே தெய்வம்.'' எனக் கொண்டு வாழ்ந்தவர். அத்துடன் வேறு பணிகளிலும் ஈடுபட்டு வாழ்ந்த பெருமகன். மூளாய் கிழக்கு ஐக்கிய நாணய சபையில் பொருளாளராகவும், பொன்னாலை வரதராசப் பெருமாள் பரிபாலன சபை கணக்காளராகவும் கடமை புரிந்து எல்லோருடைய நன்மதிப்பை பெற்றவர்.

திரு. நாகலிங்கம் அவர்களுடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் சில ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட போதிலும், அவர்களுடைய சகோதரர்களை நன்கு அறிந்தவன் நான். இன்சொல்லும், எளிமையும், அடக்கமும் எல்லாச் சகோதரர்களிலும் காணப்படும் பொது குணங்களாகும். இத்தகைய அரும் பண்புகளின் பயனால் பலரின் நட்பும் உறவும அவர்களை நாடி வந்துள்ளன.

அமரர் அவர்கள் தனக்கென வாழா பெருந்தகையாளர். குடும்பத்தில் நல்ல கணவனாகவும், அன்புடைய தந்தையாகவும், சமூகத்தில் சிறிய சான்றோனாகவும் வாழ்ந்துள்ளார் என்பதை அவருடைய மரணம் எடுத்துக் காட்டியுள்ளது. அவருடைய வழியைப் பின்பற்றி நடப்பதே நாம் அவர்க்கு செய்யும் அன்புக் கடமையாகும்.

அவருடைய பிரிவினால் துயருறும் அவருடைய குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த அநுதாபத்தை தெரிவிப்பதோடு, அமரர் அவர்களின் ஆத்மா, இறைவனின் பாதங்களை அடைந்து சாந்தி பெறுக எனப் பிரார்த்திக்கின்றேன்.

ப. சண்முகராசா
இளைப்பாறிய பிரதிக் கல்விப் பணிப்பாளர்
யாழ். மாவட்டம்

# பண்பால் உயர்ந்த உத்தமர்

நிமிர்ந்த நடையும், நேர்கொண்ட பார்வையும், பூமியிலே உண்மைக்கோர் உதாரணமாய், நேர்மைக்கோர் இலக்கணமாய், நட்பிற்கோர் சிகரமாய், பண்புக்கோர் விளைநிலமாய், கடமையில் கண்ணியமாய் வாழ்ந்து அமரரான நாராயணபிள்ளை நாகலிங்கம் அவர்களின் மறைவு அவரது குடும்பத்தினருக்கும் இந்த மண்ணிற்கும் ஈடு செய்ய முடியாத இழப்பாகும். மனிதர் பிறப்பதுவும், வாழ்வதுவும், இறப்பதுவும் இயற்கையாக இறைவனால் நடாத்தப்படுகின்றது. பிறந்தவர்களுள் வாழ்வாங்கு வாழ்ந்து மனிதர்களினால் போற்றப்பட்டு புகழோடு வாழ்வோர் சிலர். இந்த வகையிலே பார்க்கும் போது சிறப்பாக முன்னிலையில் வைத்து தெய்வமாக மதிக்கப்படப்படக் கூடிய தன்மையை அடைந்தவர் தான் அமரராகிவிட்ட திரு. நாராயணபிள்ளை நாகலிங்கம் அவர்கள்.

எப்பொழுதும் இனிமையான பேச்சும் புன்முறுவல் பூத்த முகமும் இலட்சுமிகரம் பொருந்திய அன்புப் பார்வையும் தன்னை நாடி வருபவர்களை இனிமையாக வரவேற்று உபசரித்துப் பழகும் பண்புடமை. இவை எல்லாம் பொருந்திய ஒரு பூரணமான மனிதனாகத் திகழ்ந்தவர். தான் அமரர் நாராயணபிள்ளை நாகலிங்கம் அவர்கள்.

சிறந்த உடல் ஆரோக்கியமுடைய இவர் மாரடைப்புக் காரணமாக இவ்வுலகை விட்டுச் சென்ற நிகழ்வு இவரது அன்பு மனைவிக்கும், அருமைப் பிள்ளைகளுக்கும், தனது பிள்ளைகள் போல அன்பு காட்டி வந்த மருமக்களுக்கும், பாசமிகு பேரப்பிள்ளைகளுக்கும், நல்லுறவைப் பேணி வந்த சம்பந்திமாருக்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எதிர்பாராத ஒரு இழப்பாகும்.

இந்த வேதனைக்குரிய நிகழ்வால் தாங்கொணாத இழப்பிலும் அன்னாரது ஆத்மா சாந்தியடைய வதிரன்புலோ சித்திவிநாயகரையும் முத்துக்குமாரசுவாமியையும் வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"மன்மதவாசம்"
மூளாய்,
சுழிபுரம்.

நா. குமரகுருநாதன்
கிராமஉத்தியோகத்தர்
மூளாய்

# "பழகுவதற்கினிய பண்பாளன் சித்திவிநாயகரின் திருத்தொண்டன்"

அமரர் நாகலிங்கம் அவர்கள் பழகுவதற்கினிய பண்பாளன் - அன்புள்ளம் கொண்டவர். கடவுள் நம்பிக்கையோடு வாழ்ந்தவர். பொது நலத்தொண்டு புரிபவர். தம்மை மறந்த நிலையில் பலமணி நேரம் தியானத்தில் இருப்பவர். மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகரில் அளப்பரிய பற்றுக் கொண்ட திருத்தொண்டன்.

"மரணங்கள் எப்பொழுதும் வரக்காத்திருக்கின்றன என்பதும், எப்பவோ முடிந்த விடையம் என்று யோகர் சுவாமிகள் அடிக்கடி சொன்னதும் உண்மை என்றாலும் சிலருடைய மரணங்கள் அதிர்ச்சியையும், ஆற்றொணத் துன்பமும் அடையச் செய்கின்றன. திரு. நா. நாகலிங்கம் அவர்களின் திடீர் மறைவும் இத்தகையதே.

''தக்கார் தகவிலார் என்பதவரவர் எச்சத்தாற் காணப்படும்'' என்ற வள்ளுவன் வாக்கிற் கிணங்க அவரின் பண்பு, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, கருணை உள்ளம் கொண்ட செயல் திறன்கள் அவரினால் கணக்காய்வு செய்யப்பட்ட தேவஸ்தான கணக்குகள் மூலம் சான்று பகர்கின்றன.

இக் கிராமத்தின் கண்ணெனப் போற்றப்படும் மூளாய் வதிரன் புலோ சித்திவிநாயகரின் அரிய பக்தித் தொண்டராகிய இவர் இத் தேவஸ்தான, ஆரம்பகால நிர்வாகசபை உறுப்பினராகவும், பின்னர் கணக்காய்வாளராகவும் அதன் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் தொண்டாற்றிய திருத்தொண்டன் ஆவார்.

அன்னாரின் திடீர் மறைவு எமது ஆலயத்திற்கு பெரும் பேர் இழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

''சித்தி விநாயகரின் கருணை மகத்தானது''

**க. செல்வராசா**
செயலாளர்,
மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர்
தேவஸ்தான பரிபாலன சபை

உ

# அமரத்துவம் எய்திய திரு. நா. நாகலிங்கம் அவர்கள்

திரு. நாராயணபிள்ளை - முத்துப்பிள்ளை தம்பதியரின் மூன்றாவது மகனாய் பிறந்தவர் ஆவர். இவர் கல்விகற்கும் காலத்தில் தினமும் ஆலயங்களில் தொண்டுகள் செய்து வழிபட்டு வந்தவர் ஆவர். இவரும் இவரின் மூத்தவர்களுமான திரு. நா. கணபதிப்பிள்ளை, திரு. நா. செல்லத்துரை ஆகியவர்களுடன் இளையவரும் இணைந்து கல்விகற்கும் போதே ஆலயங்களுக்கு தினமும் "திருவிளக்கேற்றி" வந்தார்கள், அக்காலத்தில் 50 ஆண்டுகளுக்கு முன் எமது கிராமத்தில் இருந்த சீனி விதானையார் என்பவரால் வெள்ளிக்கிழமைகள் தோறும் பஜனை ஆரம்பிக்கப்பட்டது. பஜனை தொடங்கிய காலத்தில் இருந்து ஆலயங்களுக்கு என பெற்றோமாக்ஸ் லாம்பு வாங்கி பஜனைக்கு பாவித்து வந்ததுடன் பஜனைக்கு வருபவர்களையும் அவ்வெளிச்சத்துடன் வீடுகளுக்கு அழைத்துச் செல்வதும் வழக்கமாக இருந்ததும் நாம் அறிந்த விடயம் ஆகும்.

1970 ஆம் ஆண்டளவில் சிவஸ்ரீ. கு. பாலசுப்பிரமணியக் குருக்களுடன் இணைந்த குழுவினர் விநாயகர் ஆலயத்துக்கு மின் இணைப்பை ஏற்படுத்திய போது தங்கள் குடும்ப சார்பாக நாலு ரியூப்லைற் செற்றை வாங்கிக் கொடுத்து உதவியதுடன் அக்காலத்தில் லைற் கூலியும் இவரின் குடும்பம் தான் செலுத்தி வந்ததும் யாம் அறிந்த ஒன்றாகும்.

சித்திவிநாயகர் முத்துக்குமாரசுவாமி தேர்த் திருப்பணிச் சபையின் ஆரம்ப காலத்தில் இருந்து இச்சபையை உருவாக்கவும், தேரை உருவாக்கவும் முன்னின்று உழைத்து சபையினர்க்கு வேண்டிய ஆக்கமும், ஊக்கமும், புத்திமதிகளையும் வழங்கியவர் அமரர் நாகலிங்கம் அவர்கள். மேலும் சபையின் ஆரம்பம் 1979 ஆம் ஆண்டில் இருந்து 1991 ஆம் ஆண்டுகள் வரையுள்ள கணக்குகள் தமக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் படி பரிசீலனை செய்து ஆய்வு அறிக்கைகளை தயாரித்து வழங்கி உதவிய தொண்டும் அளப்பரியதாகும்.

ஆலயங்களில் புராணபடிப்புக்கள், கூட்டு வழிபாடுகள் என்பன மிகுந்த அக்கறையுடனும் பயபக்தியுடனும் செய்தும், வழிநடத்தியும் வந்த பெருமதிப்பும் இவருக்கு உண்டு.

அமரர் திரு. நா. நாகலிங்கம் அவர்களுக்கு ஏற்பட்ட திடீர் மறைவை கேள்விப்பட்டதும் நாம் அதிர்ச்சியடைந்தோம், மிகவும் மனவேதனையும் அடைந்தோம். எமது சபை சார்பாக அன்னாரின் குடும்பத்தினர்க்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்ளும் வேளை அன்னாரது ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சித்திவிநாயகனையும் முத்துக்குமாரசுவாமியையும் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

மு. கதிர்காமத்தம்பி
காரியதரசி.
மூளாய். சித்திவிநாயகர் – முத்துக்குமாரசுவாமி
தேர்த்திருப்பணிச் சபை.

*நன்றி மறப்பது நன்றன்று அல்லது*
*அன்றே மறப்பது நன்று*

— திருக்குறள்

**மூளாய் – கிழக்கு ஐக்கியநாணய சங்கத்தின்**

# அனுதாபச் செய்தி

அமரரான திரு. நாராயணபிள்ளை நாகலிங்கம் அவர்களின் திடீர் எதிர்பாராத மறைவு குறித்து இச் சங்கம் மிகவும் அதிர்ச்சி அடைந்தது. சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் நடத்த ஒழுங்குகள் செய்து கொண்டிருக்கும் முதல் நாளே அமரத்துவம் அடைந்தார். (15-3-1995)

அமரர் நாகலிங்கம் அவர்கள் கூட்டுறவுத் துறையிலேயே வளர்ந்தவர் என்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும். அவர் இச்சங்கத்தில் குறுகிய காலம் தான் அங்கத்தவராயிருந்து சேவை புரிந்தாலும் - மிகவும் பொறுப்பான தனாதிகாரிப் பதவியை சேர்ந்த நாள் (25-7-1990) தொடக்கம் வகித்து வந்தார்.

அவர் சங்கத்தின் வளர்ச்சியிலும், முன்னேற்றத்திலும் மிகவும் அக்கறை கொண்டிருந்தார். சங்கத்தின் பணத்தைப் பொறுத்த வரையில் மிக இறுக்கமாகவும் கண்ணும் கருத்துமாயிருந்தார். அங்கத்தவர்கள் எல்லோரும் அவரை ஒரு வழிகாட்டி நண்பராகவே மதித்து வந்தார்கள்.

அவரின் மறைவு இச் சங்கத்திற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பென்றே கருத வேண்டும். இச் சங்கம் அவரின் மனைவிக்கும், பிள்ளைகளுக்கும் மற்றும் அவரின் குடும்பத்தவருக்கும் தங்களின் ஆழ்ந்த அனுதாபச் செய்தியை தெரிவிக்கின்றது. அவர் அந்த இலாகாவிலிருந்து ஓய்வு பெறும் பொழுது நிர்வாக உதவியாளராக பணி புரிந்தார்.

இவரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வதிரன்புலோ சித்திவிநாயகரை இச் சங்கம் பிரார்த்திக்கின்றது.

மூளாய் கிழக்கு ஐக்கிய நாணய சங்கம்

# அஞ்சலி உரை

மூளாயைச் சேர்ந்த நாராயணபிள்ளை நாகலிங்கம் அவர்கள் உத்தமர். சிறந்த ஒழுக்க சீலர்.

கூட்டுறவுத் துறையில் உயர் அதிகாரியாகப் பதவி வகித்த இவர் எப்போதுமே ஆன்மீகத் துறையில் மிகுந்த ஈடுபாடு உள்ளவராக வாழ்ந்து வந்தார்.

மூளாய் சித்திவிநாயகர் மீதும் முருகப்பெருமான் மீதும் அளவற்ற பக்தி கொண்ட இவர் பொன்னாலை வரதராஜப் பெருமாள் மீது விசேடமான பக்தி கொண்டிருந்தார்.

எந்த நேரத்திலும் பிறருக்கு உதவும் பண்பு இவருக்கு ஆண்டவன் கொடுத்த கொடையாக இருந்தது.

பொன்னாலை வரதராஜப் பெருமாள் மீது அளவற்ற பக்தியும் ஈடுபாடும் கொண்டிருந்த இவர் அடிக்கடி இத் தேவஸ்தானத்திற்கு வந்து கண்ணனைத் தரிசித்து மகிழ்வதில் பெரும் இன்பம் கண்டார்.

பொன்னாலை கிராம மக்கள் தங்கள் ஊரவர் என்று நினைக்கவும் அன்பு செய்யவும் கூடிய முறையில் பொன்னாலைக் கிராமத்துடன் இவர் தொடர்பு மிக நெருக்கமானதாக அமைந்திருந்தது.

பொன்னாலை வரதராஜப் பெருமாள் தேவஸ்தான பரிபாலன சபை அமைக்கப்பட்ட நாள் தொடக்கம் அதன் கணக்கு வழக்குகளை பரிசோதித்து நிதி அறிக்கை தயாரித்துத் தரும் பணியை தெய்வத் தொண்டாகவே கருதி இவர் செய்து வந்தார்.

இது விஷயத்தில் இவர் ஆற்றியபணி எவ்வளவு சிறந்தது என்பதற்கு கடந்த பல ஆண்டுகளாக இவர் தயாரித்துத் தந்த நிதி அறிக்கைகளே சான்றாக இருக்கின்றன.

கோயில் பணம் ஒரு சதமேனும் வீணாகச் செலவு செய்யப் படக் கூடாது என்பதிலும், செலவழிக்கப்பட்ட ஒவ்வொரு சதத்திற்கும் மிகத்திருத்தமான கணக்குகள் இருக்க வேண்டும் என்பதிலும் இவர் மிகவும் கண்டிப்பாக இருந்தார்.

யார் என்ன பிழை செய்தாலும் மிகுந்த அன்போடும் பண்போடும் நடந்து அவர்களை நல்வழிப்படுத்துவது இவரது சிறந்த பண்பாக இருந்தது.

நிறைவாழ்வு வாழ்ந்த பெருமகன் இவர்.

நாராயணனுடன் இரண்டறக் கலந்து ஸ்ரீவைகுண்டபதவி பெறும் பாக்கியம் இவருக்கு நிச்சயம் உண்டு என்பதே எமது அசையாத நம்பிக்கை ஆகும். அதுவே நமது பிரார்த்தனையும் ஆகும்.

பொன்னாலை வரதராஜப் பெருமாள்
தேவஸ்தான பரிபாலன சபையினர்

# எங்குற்றார் அங்குற்றே
# அவர்பாதம் போற்றிடுவோம்.

நாராயணற்கும் நலமருகன் கணபதிக்கும்
ஆழாகிச் சேவை செய்த அருந்தலைவர் நாகலிங்கம்
நாளாகிப் போனதென்றே நல்லுடலம் விட்டகன்று
தானாகித் தெய்வமென தளர்வறியா உயர்வுற்றார்!

உற்றதன் துணைவியாற்கு ஊன்றுகோல் இவரானார்.
உயர்வுடைய மக்களுக்கோ எழுதுகோல் போலானார்.
கற்றவர்க்கு கண்ணியத்தை அளக்கின்ற கோலானார்
காலமுற்றும் நாகலிங்கர் கை செங்கோலே வைத்திருந்தார்

கூட்டுறவில் சேர்ந்து இவர் நாட்டுயர்வு தந்தார்.
கூடவந்த சோதரனார் ஊர்குயர்வு தந்தார்.
ஈன்றெடுத்த பிள்ளைகளால் இமயமெனப் புகழ்கொண்டு
ஆட்டுவிப்பார்க் காட்பட்டோ எம்நாகலிங்கர் அமரரானார்!

தொட்டதெல்லாம் பொன்னாகும் தொடர்ந்ததெல்லாம்
பணியாகும
என்பதற்கோர் வடிவானார் வள்ளலார் நாகலிங்கம்
கிட்டவந்து காலன்தன் உயிர் கவர நிற்கையிலும்
பட்டதுயர் ஏதுமுண்டோ பகிடி விட்டே பின்சென்றார்!

பூட்டி வைப்பதில்லை முகம் புன்னகைதான் சிந்தும்
பூசை ஒலி மந்திரம் போல் பேசிநிற்பார் என்றும்
ஓசையொன்று பேசும்விழி ஓரமதில் நிற்கும்
ஓயாதார் ஒருநாளும் உயர்நாகலிங்கம் ஏன் ஓய்ந்தார்!

வேளைக்குச் சாப்பிடம்மா வேலையெனக்குண்டு என்றார்
வேலைக்கு போங்களப்பன் வேதனைகள் இல்லை என்றார்
கோயிலுக்குப் போனமகன் குரல்கேட்கும் வரையிருந்தார்
பிள்ளையார் துணையென்றே நாகலிங்கர் போய் மறைந்தார்!

பழமுதிர் சோலையிந்தப் படலையிலே வந்துநின்றால்
உளம்நிறைய வளம்கொண்டு ஓடிவரும் உத்தமனார்
உயர்மூளாய் நாராயணபிள்ளை மகன் நாகலிங்கர்
எங்குற்றார் அங்குற்றே அவர் பாதம் போற்றிடுவோம்!

அன்புடன்
அவர் பாதமலர் போற்றும்
அன்பர்
சிவசுப்பிரமணியம்

மூளாய் - தெற்கு,
சுளிபுரம்.

# இரங்கலுரை

நூல்களை வாசிக்கும் பழக்கமே இவரையும் என்னையும் நண்பர்களாக ஆக்கியது.

ஆங்கிலம் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் தரமான நூல்களைத் தேடிப்படிப்பதிலும், படித்த நூல்களில் உள்ள நுட்பமான கருத்துக்களைக் கிரகித்து எடுத்துச் சொல்வதிலும் இவரிடம் தனித்திறமை இருந்தது.

கடந்த பல வருடங்களாகவே சமயம் தத்துவம் போன்ற துறைகளைச் சார்ந்த நூல்களை வாசிப்பதில் இவர் மிகுந்த ஆர்வம் காட்டி வந்தார்.

" சைவ சித்தாந்த " நூல்களை வாசிப்பதிலும், தத்துவ ஆசிரியர்களான பேராசிரியர் ராதாகிருஷ்ணன் பெட்ராண்ட் ரஸல், ஆகியோரின் நூல்களை தேடித் தேடிப் படிப்பதிலும் மிகுந்த ஆர்வம் காட்டி வந்தார். தேவாரங்களையும், திருவாசகத்தையும் காதலாகிக் கனிந்து பாராயணம் செய்து வந்தார்.

கற்க வேண்டிய நூல்களை மட்டுமே கற்றார். கற்றவற்றை கசடறக் கற்றார். கற்றதன்படி வாழ்க்கையை அமைத்துக்கொள்வதற்காகக் கற்றார்.

ஆடம்பரத்தையும், வீண் பெருமைகளையும், விளம்பரத்தையும் விரும்பாத உத்தமராக இவர் வாழ்க்கை நடத்தினர்.

யார் துன்பப் பட்டாலும் விரைந்து சென்று அவர்களுக்கு அமைதியாக உதவும் பண்பு இவரிடம் நிறைந்திருந்தது.

நிறைகுடம் என்றசொல் இவருக்கே மிகப் பொருத்தமானது. பழகப்பழக இவருடன் மேலும் மேலும் பழகவேண்டும் என்ற விருப்பமே நமக்கு மேலோங்கும். அத்தனை பண்பாளராக இவர் வாழ்ந்தார்.

இவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பரம்பொருளை பிரார்த்திக்கின்றேன்.

க. குமாரசுவாமி .
ஆசிரியர், பொன்னாலை .

# ஆக்கமான பிறப்பு அமைக

அண்மையில் மறைந்த திரு. நாராயணபிள்ளை நாகலிங்கம் அமரத்துவம் அடைந்த செய்தியை நான் அறிந்ததும் மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன். நான் இப்பெரியாருடனும், அவர் குடும்பத்தாருடனும் 1984 ஆம் ஆண்டு தொடக்கம் மிக நெருங்கி பழகி வந்து இருக்கின்றேன். அவருடைய அன்பு மனைவி திருமதி நா. பத்மாவதியும் அவரின் செல்வப் பிள்ளைகள் யாபேரும் மிகவும் கண்ணியமானவர்கள். பண்பானவர்கள். இனியவர்கள்.

அமரர் திரு. நாகலிங்கம் குழந்தை உள்ளம் படைத்தவர். அவர் அன்பாக பேசுவார். எவரையும் நோக பேசமாட்டார். ஓர் நல்ல மனிதர். ஒருவருக்கு அமைய வேண்டிய உயர்ந்த குணங்கள் யாவும் அவரிடம் இருந்தன. கருணையுள்ளம் படைத்த இவர் ஊர்மக்களால் மதிக்கப்பட்டவர். அவர் எனது வீட்டுக்கு மாதம் ஒருமுறை என்றாலும் வருவார். சுயநலங்களை விசாரிப்பார். பின் என்னுடன் சமய சம்பந்தமான விடயங்களைப் பேசுவார். அவருக்கு சைவசமயத்தில் ஆழ்ந்த அறிவு உண்டு. அவர் என்னிடம் சமய புத்தகங்கள் வாங்கிப் படிப்பது வழக்கம்.

அமரத்துவம் அடைவதற்கு ஏறக்குறைய 15 தினங்களுக்கு முன் எனது வீட்டுக்கு வந்தார். அவர் கூட்டுறவு இலாகாவில் உயர் பதவி வகித்தவர். என்னுடன் கூட்டுறவு சம்பந்தமான பல விடயங்களை கதைத்தார். அவர் இரண்டு சமய புத்தகங்கள் கேட்க நான் கொடுத்தேன்.

1) ''தெய்வீக வாழ்வுக்கு சில வழிகள்''
2) ''இந்து மத தெய்வக் கொள்கை'' என்பன.

அவர் இதைத்தான் நான் தேடித் திரிந்தேன் இனி எல்லாம் சரி என்று சொன்னார். ஏன் அப்படி சொல்லுகிறார் என்று மனதுக்குள் நினைத்தேன். (இப்போது அவர் ஏன் சொன்னார் என்று புரிகிறது) அன்று நான். யாழ்ப்பாணம் சென்று வந்தபடியால் களைப்புற்று இருந்தேன். அவர் எனது நிலையை அறிந்து என்னைப் போய் சற்று நேரம் உறங்கும்படி கூறி விடைபெற்றுச் சென்றார். இதுதான் அவர் என்னுடன் கடைசியாக கதைத்த கதையாகும். இதனை நினைக்க நினைக்க மிக வேதனையாக இருக்கின்றது.

எந்த திருமண வீட்டிலோ அல்லது அந்தியேட்டி வீட்டிலோ நாங்கள் இருவரும் கலந்து கொள்ள நேருமிடத்தில், அவர் என்னை தனக்கு அருகில் இருக்க செய்து உணவு உண்பார். மேலும் மூளாயி

ளுள்ள ஆலயங்களிலோ அல்லது வேறு இடங்களிலோ என்னை சந்தித்தால். அவர் முகத்தில் மலர்ச்சி ஏற்படும். உடனே எனக்கு அருகில் வந்து எனது சுகநலங்களை விசாரிப்பார். ஒரு தகப்பன் மகனுக்குச் செய்வது போல் நான் அவரின் அன்பையும் ஆதரவையும் பெற்று இருந்தேன்.

நான் தலைமை தாங்கும் சங்கத்தின் நடைமுறைச் சிக்கல்களை அவரிடமும் எடுத்துக் கூறுவேன். அவர் தனது விளக்கத்தை மிகவும் தெளிவாகவும் விளக்கமாகவும் எடுத்துக் கூறுவார். இவர் பல வருடம் பொன்னாலை வரதராசப் பெருமாள் ஆலயத்தின் வரவு – செலவு கணக்குகளையும், மூளாய் சித்தி விநாயகர் ஆலயத்தின் வரவு-செலவு கணக்குகளையும் மிகவும் திறம்பட ஆய்வு செய்து பக்தர்களின் பாராட்டைப் பெற்றவர்.

இவர் தனது மூத்த மகளின் திருமணத்திற்காக தமிழ்நாடு செல்ல வேண்டியிருந்தபோது என்னிடம் ஆலோசனையைப் பெற்று அங்குள்ள பாடல் பெற்ற திருத்தலங்கள் யாவும் தரிசனம் பெற்று வந்தார்.

ஒருவர் செய்த பாவ புண்ணியச் செயற்பாடுகள் அவர்களின் ஆத்மா பிரியும் காலத்தில் தான் தெரியும் என்பார்கள். இதற்கு எடுத்துக்காட்டாக அமரர் நாகலிங்கம் திடீர் என நோய்வாய்ப்படாமல் சுயநினைவுடனேயே தனது மகன் ஸ்ரீ கணேசன் தன் மனைவி அருகில் இருக்க அவரின் ஆன்மா உடலை விட்டு பிரிந்தது. அவரது பிரிவினால் வருந்தும் அன்பு மனைவி, அருமை பிள்ளைகள், மருமக்கள் செல்லப் பேரப்பிள்ளை, பாசமிகு சகோதரர்களுக்கு எனது அனுதாபத்தை தெரிவிப்பதன்றி வேறு என்ன செய்யலாம்.

பிறப்பும் இறப்பும் மனிதனின் இயற்கை நியதி இதை எவராலும் தடுக்க முடியாது. அவருடைய ஆத்மா சாந்தியடைந்து ஆக்கமான பிறப்பு அமைக. அருள்மிகு மூளாய் சித்தி விநாயகர் அருள் புரிவாராக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

வி. செல்வரத்தினம்
தலைவர்: அராலி வண்ணபுரம் ஸ்ரீ விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாதேஸ்வரர் தேவஸ்தானம்.
தலைவர்: அராலி மேற்கு உலோகசிட்டி ஐக்கிய நாணய சங்கம்

அப்புக்காத்துவளவு,
அராலி – மேற்கு,
வட்டுக்கோட்டை.

# எமது அன்புத் தந்தையார் தினசரி பாடும் பாடல்கள்

1. மூஷிக வாகன மோதக ஹஸ்த
சாமர கர்ண விளம்பித சூத்திர
வாமனரூப மகேஸ்வர புத்திர
விக்னவிநாயக பாதம் நமஸ்தே.

2. தும்பிக்கை கொண்ட உன் அன்புமுகம் கண்டு
நம்பிக்கை பிறக்கிறது – வரும்
துன்பங்கள் பறக்கிறது – உன்
தோற்றத்தில் பிரபஞ்ச மாற்றங்கள் யாவுமே
காட்டப்படுகிறது – உயிர்
ஊட்டப்படுகிறது. (தும்பிக்கை)

தொந்தி வயிற்றினில் தங்கியே உலகங்கள்
சுற்றிவருகிறது – நல்
வெற்றி தருகிறது.
ஐங்கரம் ஐந்தொழில் ஆற்றியே யாரையும்
ஆட்டிப் படைக்கின்றது – உன்
ஆட்சி நடக்கிறது. (தும்பிக்கை)

வந்து நின் சந்நிதி வாசலில் நின்றவர்
வரங்கள் பெறுகின்றார் – பல
நலங்கள் உறுகின்றார்
தந்தம் ஒடித்தொரு சரித்திரம் எழுதுவாய்
தருவாய் மோதகமே – நவ
சக்தி விநாயகனே. (தும்பிக்கை)



# நன்றி நவிலல்

எமது குடும்பத்தின் மணிவிளக்கு, எமது அமிழ்தினுமினிய குடும்பத் தலைவரது திடீர் மரணச் செய்தி அறிந்து ஆறாத்துயரில் மூழ்கியும், இறுதிக் கிரியையிற் கலந்து கொண்டும் அநுதாபங்களைத் தெரிவித்த உற்றார் உறவினர், அன்பர்கள், நண்பர்கள், அயலவர்கள் ஆகியோருக்கும், மலர்மாலை சூட்டியும், மலர்வளையம் வைத்தும், இரங்கலுரை நிகழ்த்தியும் இரங்கல் செய்திகள் அச்சேற்றி வெளியிட்டும் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், இன்றைய வீட்டுக்கிருத்திய கருமங்களில் எமது பணிவான அழைப்பை ஏற்று பங்குபற்றியவர்களுக்கும, இந்நினைவு மலருக்கு இரங்கற் பாக்களையும், இரங்கற் செய்திகளையும் யாத்துத் தந்து உதவிய பெரியோர்களும் இம் மலரினை அச்சேற்றித் தந்துதவிய பாரதி பதிப்பகத்தினருக்கும், இன்னும் பல்வேறு வழிகளிற் கைகொடுத்துதவிய அன்பர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றியை நவில்கின்றோம்.

''பழமுதிர்ச்சோலை''
மூளாய்,
சுழிபுரம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேர்த்தி

பாரதி பதிப்பகம், 430 கே. கே. எஸ் வீதி யாழ்ப்பாணம்

# வம்சாவளி

- நாகநாதர் + தெய்வானைப்பிள்ளை
  - நாராயணபிள்ளை
  - வள்ளியம்மை
  - முத்துப்பிள்ளை
  - தங்கமுத்து

- சின்னத்தம்பி + ந
  - வள்ளியம்மை
  - கிருஷ்ணபிள்ளை

- நாராயணபிள்ளை + முத்துப்பிள்ளை
  - கணபதிப்பிள்ளை
  - இலட்சுமியார்
  - செல்லத்துரை
  - நாகலிங்கம்
  - வேலுப்பிள்ளை

- நாகலிங்கம் — பத்மாவதி
  - ஜெகதீஸ்வரி + ரங்கநாதன்
  - ஸ்ரீதரன் + கௌரி
    - ↓ மயூரி
  - ஸ்ரீகாந்தன் + சாந்தினி
  - கலைச்செல்வி
  - ஸ்ரீகணேசன்

நன்னிப்பிள்ளை

ளை முத்துப்பிள்ளை வைத்திலிங்கம் வினாசித்தம்பி

கார்த்திகேயர் + செல்லம்

வதி கமலாவதி லீலாவதி சிவானந்தராசா இந்திராதேவி கணேசானந்தன் சிவதேவி ஸ்ரீதேவி

ஸ்ரீபாஸ்கரன்